மாமன்ற உறுப்பினர்கள் அனைவருடைய கோரிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, ஒன்றன்பின் ஒன்றாக அத்தனை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும்-ஒன்றியத்திற்கு ஒன்று என்ற அடிப்படையிலே தரம் உயர்த்தப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மாமன்றத்திலே தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே இதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 269, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

269—

தரம் உயர்த்துதல்

***35924—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, மதுக்கரை ஒன்றியத்தில் உள்ள அரிசிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதி, மதுக்கரை ஒன்றியத்திலுள்ள அரிசிப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் தங்கத் தாரகை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் வணங்குகின்றேன். எனது தொகுதியான பேரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

[2005 ஏப்ரல் 1

மதுக்கரை ஒன்றியம் நமது தமிழகத்தினுடைய எல்லைப் பகுதியிலே அமைந்திருக்கின்றது. அதுவும் குறிப்பாக, என்னுடைய பேரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒரே ஒன்றியமாக அந்த ஒன்றியம் திகழ்ந்துகொண்டிருக்கின்றது. அந்த ஒன்றியம், கோவையிலேயிருந்து 20 கிலோ மீட்டருக்கு அப்பால் அமைந்திருக்கின்றது. அந்த ஒன்றியத்தினுடைய ஆரம்ப சுகாதார நிலையம் முதன்மை மருத்துவமனையாக மதுக்கரை ஒன்றியத்திலே செயல்பட்டு வந்துகொண்டிருக்கின்றது. ஆகவே, அதனுடைய சுற்றுப்புறத்திலேயிருந்து ஏறத்தாழ 25–க்கும் மேற்பட்ட கிராமப்புறங்களிலேயிருந்து, அதுவும் குறிப்பாக, மேற்குத் தொடர்ச்சி மலை வருகின்ற மலைவாழ் மக்கள் வசிக்கின்ற, பெரும் பகுதிகளிலேயிருந்து ஏறத்தாழ தினந்தோறும் அந்த மருத்துவமனைக்கு 850–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வந்து சிகிச்சை பெற்று வந்துகொண்டிருக்கின்றார்கள். அந்த மருத்துவமனையை தரம் உயர்த்துவதற்கான போதுமான கட்டட வசதிகளும் அங்கே அமைந்திருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறையினுடைய வழியிலே அந்த மருத்துவமனை அமைந்திருக்கின்ற காரணத்தினால், இந்த நிதியாண்டிலே மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்த மக்களுடைய நீண்ட கால கோரிக்கையாக இருக்கின்ற, அரிசிப்பாளையத்திலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, கிராமப் பகுதி மக்களுடைய நலன் கருதி அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த வேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணத்திலே இன்றையதினம் 105 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே பார்க்கும்போது இன்றையதினம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வருகின்ற நோயாளிகள், அது வெளி நோயாளியாக இருந்தாலும் சரி, உள் நோயாளியாக இருந்தாலும் சரி, எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையான, அரிசிப்பாளையத்தினுடைய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா

2005 ஏப்ரல் 1]

அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைமைக்கேற்ப அம்மாவினுடைய ஆலோசனை பெற்று, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6.5 கோடி தமிழக மக்களுடைய பாதுகாவலராக விளங்குகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த நிதியாண்டிலேயே நிதிநிலைக்கேற்றவாறு என்னுடைய தொகுதிக்குட்பட்ட, நம்முடைய மாநிலத்தினுடைய எல்லைப் பகுதியில் இருக்கின்ற அரிசிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்திக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு நம்முடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதியிலேயிருக்கின்ற பொதுமக்களுடைய சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 270, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

270—

பேருந்துப் பணிமனை

***4289—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, கீரனூரில் பேருந்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, கீரனூரில் அரசுப் பேருந்துப் பணிமனை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்